DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No. 298/2021**

| | | | |
|---|---|---|---|
| Name | : | மாரியப்பன் | **Pw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of August 2022.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.1 ஆகும். எனது Discharge Summary அசல் ம.சா.ஆ.2 ஆகும். TN 92 C 1711 வாகனத்தில் இன்சூரன்ஸ் பாலிசி நகல் ம.சா.ஆ.3 ஆகும். TN 92 C 1711 வாகன ஆர்.சி. புக் நகல் ம.சா.ஆ.4 ஆகும். எனது ஓட்டுநர் உரிமத்தின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.5 ஆகும். எனது ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு பாஸ் புத்தகம் ஒளிப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.6 ஆகும். மருந்து பில்கள் ரூ.1,33,700 க்கானது ம.சா.ஆ.7 ஆகும். Discharge Summary ம.சா.ஆ.8 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 5வது வரை படித்திருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் இந்த விபத்து சம்பந்தமாக குற்ற எண்.562/2019 என்ற வழக்கு என் மீது தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த முதல் தகவல் அறிக்கையில் என் மீது தவறு இல்லை என்பதற்காக காவல்துறை மேல்அதிகாரிகளிடமோ Writ மனுவோ தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் என் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சிறிது நாட்கள் கழித்து தான் இந்த விபரம் எனக்கு தெரியவந்தது. விபத்து சம்பந்தப்பட்ட பார்வை மகஜர், மாதிரி வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்திற்கு முழு காரணம் நான் தான் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் மீது எந்தத் தவறும் இல்லை என்பதால் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தைத் தாக்கல்செய்தால் இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் அவற்றைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற வாகனத்தை அப்பொழுது தான் வாங்கினேன். பெயர் மாற்றம் செய்யவில்லை. அந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை. அந்த வாகனத்தின் பதிவு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. விபத்தில் ஏற்பட்ட காயம் சிறிய காயங்கள் தான் என்றும் அதுவும் ஆறிவிட்டது என்றால் சரியல்ல. எனது வயது, வருமானம், வேலை போன்றவற்றைக் காண்பிக்கும் ஆவணங்களைத் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்திற்கு நானே காரணம் என்பதாலும் 1ம் எதிர்மனுதாரர் காரணமில்லை என்பதாலும் இந்த எதிர்மனுதாரர்கள் நஷ்ட ஈடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.